அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

அ.எண் : 09 / 2018
தேதி : 20.01.2018

**இந்தியாவிலேயே மாநில மொழி நாளிதழ்களில் “தினத்தந்தி” முதலிடம்.**

**அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனத்தலைவர் ரா.சரத்குமார் வாழ்த்து.**

"தினசரி செய்தி பத்திரிகைகளை, எத்தனை வாசகர்கள் படிக்கிறார்கள்", என்பது தொடர்பாக எம்.ஆர்.யூ.சி. நிறுவனம் நடத்திய ஆய்வில் இந்தி அல்லாத மற்ற மொழி பத்திரிகைகளில் 2.31 கோடி வாசகர்களுடன் முதலிடத்தை பிடித்திருக்கும் “தினத்தந்தி“ தமிழ் நாளிதழுக்கு என்னுடைய வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

“தினத்தந்தி“ தமிழ் நாளிதழ் முதலிடத்தை பிடித்திருப்பது தமிழ் மொழிக்கும், தமிழர்களுக்கும் பெருமைக்குரியது. தமிழர்களின் வாழ்வோடு பின்னிப் பிணைந்திருக்கும் தினத்தந்தி நாளிதழ், கடந்த 75 ஆண்டுகளாக பெற்றுவரும் வளர்ச்சி பாராட்டுக்குரியது. அதன் வெளிப்பாடே இந்த முதலிடம் என்ற அங்கீகாரம்.

நிறுவனர் அமரர் சி.பா.ஆதித்தனார் காலம் தொடங்கி, அவரை தொடர்ந்து சிவந்தி ஆதித்தன் அவர்கள் காலத்திலும் தற்போது திரு.பாலசுப்ரமணியன் ஆதித்தன் தலைமை ஏற்று நடத்தும் இந்த நாளிதழ் அந்தந்த காலத்திற்கு ஏற்றவாறும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்றவாறும் வாசகர்களின் தேவையறிந்து பத்திரிகை துறையை மெருகேற்றிவருவது இந்த பத்திரிகையின் வெற்றிக்கு முக்கிய காரணம். அவர்களின் தெளிவான பாதை, சீரிய தலைமை பண்பு இந்த குழுவின் வளர்ச்சிக்கு முக்கிய காரணம் என்பதை அனைவரும் ஒப்புக்கொள்வர்.

இத்தகைய பெருமைக்குரிய “தினத்தந்தி“ தமிழ் நாளிதழ் முதலிடம் பிடிப்பதற்கு அயராது பாடுபட்டுவரும் அனைத்து ஊழியர்களுக்கும், செய்தி ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்களுக்கும், நிருபர்களுக்கும், புகைப்படக் கலைஞர்களுக்கும் என் சார்பிலும், அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் சார்பிலும் மீண்டும் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்
என்றும் அன்புடன்

**ரா.சரத்குமார்**
நிறுவனத் தலைவர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com